10.02.2026

அ.வ.எண்.249/2012

பி.சா.2 பஞ்சப்பன் குறுக்கு விசாரணை

1. வாதிகள் தாவாசொத்து தங்களுடையது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளனர். தாவாசொத்தின் சர்வே எண்.46 ஆகும். வாதிகளின் தாத்தா பெயர் மாரி என்றால் எனக்கு தெரியாது. மாரி என்பவருக்கு ஆதிமூலம் என்ற மகன் இருந்தார் என்றால் எனக்கு தெரியாது. வாதிகளை தெரியும். 1முதல் 3 வாதிகளின் அப்பா பெயர் முனுசாமி என்றால் சரிதான். முனுசாமி அப்பா பெயர் எனக்கு தெரியாது. முனுசாமி உடன் பிறந்த சகோதரர் ராமசந்திரன் என்றால் சரிதான். ராமசந்திரன் பிள்ளைகள் தான் 6 முதல் 10 வாதிகள் என்றால் சரிதான். தாவாசொத்திற்கு ஆதியில் பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் சிங்காரவேல் நாயுடு பெயரில் இருந்தது என்று கேள்விபட்டேன், எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

2. சிங்காரவேல் நாயுடு பெயரில் உள்ள பட்டாவை நான் பார்த்தேனா என்றால் இல்லை, எங்கள் பெயரில் பட்டா வந்துவிட்டது. பழைய பட்டாவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ராமசந்திரன் மற்றும் முனுசாமி தாவா கிராமத்தில்தான் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். ராமசந்திரன் மற்றும் முனுசாமி தாவாசொத்தில் கூரை வீடு கட்டி வசித்து வந்தார்களா என்றால் சரியல்ல, அவர்கள் வேறு சர்வே எண்களில் குடியிருந்து வந்தார்கள். எனது வீட்டிற்கு வடக்கு பக்கம் வாதிகள் வசித்து வந்தார்கள். நான் தாவாசொத்தில் வசிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாவாசொத்தில் கூரை வீடு

கட்டியுள்ளேன். தாவாசொத்தில் நான் வசித்து வருவதற்கு வீட்டு வரி ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

3. நான் தாவாசொத்தில் வசிக்கவில்லை அதற்கு பக்கத்து தெருவில்தான் வசித்து வருகிறேன், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவாசொத்து உட்பிரிவு ஆன விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வாதிகள் மற்றும் எங்கள் தரப்பில் வருவாய் துறை அலுவலகத்தில் பட்டா உட்பிரிவு செய்வதற்கு முன்பு விசாரணைக்கு அழைத்தார்களா என்றால் இல்லை. எனது பிரமாணவாக்குமூலத்தில் கலைமணி என்பவர் கிரையம் வாங்கியதாக கூறியுள்ளேன் அதன் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி கிரைய பத்திரத்தை பார்த்தால்தான் அவர் எந்த சர்வே எண்ணிற்கு வாங்கினார் என்று தெரியும் என்றால் சரிதான். நான் அந்த பத்திரத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன். மேற்சொன்ன கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. 3ம் பிரதிவாதி சத்யா என்பவர் வேறு ஒரு இடத்தில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி குப்பன் என்பவர் வேறு இடத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எனது பிரமாணவாக்குமூலத்தில் தாவாசொத்தை எனது முன்னோர்கள்தான் அனுபவித்து வந்தார்கள் என்று கூறியுள்ளேன், அவர்களின் பெயர் என்னவென்றால் எனக்கு தெரியாது. எனது தாத்தா பெயர் மட்டும்தான் தெரியும், அவர் பெயர் வல்லியன். என்னுடைய பதிலுரையில்

முன்னோர்களின் பெயர்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தாவாசொத்துக்கு எனது முன்னோர்கள் பெயரில் வருவாய் துறை ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**5**. வாதிகள் தாவாசொத்திற்கு அவர்களின் மூதாதையர் பெயரில் பட்டா பாஸ்புக் இருக்கிறது என்று கூறிதான் வழக்கை தாக்கல் செய்துள்ளாரகள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் எந்த ஆவணத்தின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரத்தை வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். வாதிகளின் தாத்தா பெயரில் பட்டா இருந்த விவரத்தை நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. தாவாசொத்து எனக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் மற்றும் எனது மூதாதையருக்கும் எந்த உரிமை கிடையாது, வாதிகளின் சொத்தாகும், வாதிகளின் சொத்தை அபகரித்துள்ளதால் நாங்கள் காலி செய்ய வேண்டும் என்று இந்த வழக்கை வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

**6**. தற்போது வரை தாவாசொத்தில் நாங்கள் வசிக்கவில்லை, அதனால் அந்த சொத்திலிருந்து காலி செய்தால் எங்களுக்கு இழப்பீடு எதுவும் நேரிடாது என்றால் சரியல்ல. எனக்கு தாவா கிராமத்தில் மற்றொரு வீடு உள்ளது அதனால் தாவாசொத்திலிருந்து வெளியேறுவதற்கு எங்களுக்கு எந்த சிரமுமம் இல்லை என்றால் சரியல்ல. எனவே வாதிகள் கோரியப்படி தீரப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.